சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – ஆதிதிராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் – திட்டங்களின் செயலாக்கம் – மாநில அளவிலான கண்காணிப்புக்குழு (State Level Monitoring Committee for SCSP & TSP) அமைத்து ஆணையிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமபா.1) துறை

அரசு ஆணை (நிலை) எண். 122 நாள்: 06.10.2010

புரட்டாசி 20, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண். 134, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 09.10.2006.
2. அரசு ஆணை (நிலை) எண். 59, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 01.06.2007.

------

**ஆணை:**

தமிழகத்தில் 1976-77 ஆம் ஆண்டு முதல் பழங்குடியினர் துணைத் திட்டமும் 1980-81 முதல் ஆதிதிராவிடர் துணைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் தொடர்பான விரிவான வழிகாட்டுதல்கள் அவ்வப்போது மத்திய அரசு மற்றும் மத்திய திட்டக்குழுவால் அளிக்கப்படுகின்றன.

2. இவ்விரு துணைத் திட்டங்களின் அடிப்படை நோக்கங்களாவன:–

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக அம்மக்களின் விகிதாச்சாரத்திற்கு குறையாமல் ஆண்டு திட்ட நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து அவர்களை பயன்பெறச் செய்தல்.

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வறுமை மற்றும் வேலையின்மையினை குறைத்தல்.

- பெரும்பாலும், மேம்பாட்டுப் பணிகள் வாயிலாக ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள், வளர்ச்சியடைந்திட ஆக்க வளமுடைய சொத்துகளை உருவாக்குதல்

- ஆதிதிராவிட மக்கள் மற்றும் பழங்குடியின மக்கள் மனிதவள மேம்பாடு காண, போதுமான கல்வி மற்றும் சுகாதாரத்தை அளித்தல்

- அனைத்து விதமான சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி சமூகத்திற்கு உடைமைகள் மற்றும் நிதி பாதுகாப்பு அளித்தல்

3. மத்திய திட்டக்குழுவின் வழிகாட்டுதல் படி, பார்வை 1–இல் படிக்கப்பட்ட அரசாணை வாயிலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது இவ்விரு துணைத் திட்டங்களை வடிவமைக்கவும், நடைமுறைப்படுத்தவும் பற்றாளர் துறையாக (Nodal Department) செயல்படுகிறது.

4. பார்வை 2–இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ஆகியோரை முறையே ஆதிதிராவிடர் துணைத் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகியவற்றின் கீழ் வரும் அனைத்து திட்டங்களின் (schemes) முன்னேற்றத்தை மாவட்ட அளவில் கண்காணித்திடும் மற்றும் ஆய்வு செய்திடும் அலுவலர்களாக செயல்படுகின்றனர்.

5. மத்திய திட்டக்குழு பரிந்துரையின் அடிப்படையில் ஆதிதிராவிடர் துணைத் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகியவற்றின் கீழ் செயலாக்கத் துறைகளால் மாநிலத்தில் செயற்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை (schemes) கண்காணிக்க **மாநில அளவிலான கண்காணிப்பு குழு (State Level Monitoring Committee for SCSP & TSP)** ஒன்றை தலைமைச் செயலாளர் தலைமையில் அமைத்து அரசு ஆணையிடுகிறது.

இக்குழுவின்உறுப்பினர்கள் விபரம் பின்வருமாறு:–

| வ.எண். | அலுவலர்கள் | பதவி |
|---|---|---|
| 1. | தலைமைச் செயலாளர் | தலைவர் |
| 2. | முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | உறுப்பினர்-செயலர் |
| 3. | முதன்மைச் செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 4. | முதன்மைச் செயலாளர்,<br>தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை | உறுப்பினர் |
| 5. | முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை | உறுப்பினர் |
| 6. | முதன்மைச் செயலாளர், வேளாண்மைத்துறை | உறுப்பினர் |
| 7. | செயலாளர்/முதன்மைச் செயலாளர், வருவாய்த்துறை | உறுப்பினர் |
| 8. | முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை | உறுப்பினர் |
| 9. | முதன்மைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை | உறுப்பினர் |

6. இந்த உயர் மட்டக்குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடி அனைத்து செயலாக்கத் துறைகளால் செயற்படுத்தப்படும் ஆதிதிராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் செயலாக்கத்தை ஆய்வு செய்யும். மேலும், மாநில திட்டக்குழுவின் உறுப்பினர்–செயலரை இக்குழு கூட்டத்தின் சிறப்பு அழைப்பாளராக அழைக்கலாம். ஏனைய துறைச் செயலாளர்களை தேவைக்கேற்ப இக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

7. இவ்வாணை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நிதித்துறை ஆகியவற்றின் இசைவினை முறையே அ.சா.எண். 53/செயலர்/10 நாள் 16.08.10 மற்றும் அ.சா.எண். 2061/நி.செ/P/10 நாள் 07.09.10–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

விஷ்வநாத் ஷெகாவ்கர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
உறுப்பினர் (ஆதிதுதி/பதுதி), திட்டக்குழு, மத்திய அரசு, யோஜனாபவன், புதுதில்லி–110 001.
ஆலோசகர் (சமூகநீதி), திட்டக்குழு, மத்திய அரசு, யோஜனாபவன், புதுதில்லி–110 001.
செயலாளர், சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகம், மத்திய அரசு, சாஸ்திரிபவன், புதுதில்லி–110 115.
செயலாளர், பழங்குடியினர் நல அமைச்சகம், மத்திய அரசு, சாஸ்திரிபவன், புதுதில்லி–110 001.
தலைமைச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
அனைத்து துறைச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை–9.
உறுப்பினர் செயலர், மாநில திட்டக்குழு, சென்னை–5.
அனைத்து துறை தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
<u>நகல்:</u>
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
அனைத்து பிரிவுகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

06.10.10

27 OCT 2010

## ABSTRACT

Adi Dravidar & Tribal Welfare – Scheduled Castes Sub Plan (SCSP) and Tribal Sub Plan (TSP) – Implementation of Schemes – State Level Monitoring Committee for SCSP & TSP – Constituted – Orders – Issued.

---

### ADI DRAVIDAR & TRIBAL WELFARE (MEC-1) DEPARTMENT

**G.O. (Ms) No.122** **Date: 06.10.2010**
**Purattasi 20, Thiruvalluvar Aandu 2041.**
**Read:**

1. G.O.(Ms)No.134, Planning, Development and Special Initiatives (SP) Department dated 09.10.2006
2. G.O.(Ms)No.59, Adi Dravidar & Tribal Welfare (MEC-3) Department dated 01.06.2007

---

**ORDER**:

In Tamilnadu, the Tribal Sub Plan (TSP) and Scheduled Castes Sub Plan (SCSP) are being implemented since 1975-76 and 1980-81 respectively as part of State's Annual Plan. Detailed guidelines relating to the SCSP and TSP have been issued by the Government of India/ Union Planning Commission from time to time.

2. The objectives of both these Sub-Plans are:

- to channelise the flow of outlays and benefits from the State's Annual Plan Outlay for the development of SCs and STs, atleast in proportion to their population both in physical and financial terms
- to seek substantial reduction in poverty and unemployment among Scheduled Castes and Scheduled Tribes
- creation of productive assets in favour of Scheduled Castes and Scheduled Tribes to sustain the growth likely to accrue through development efforts.
- human resource development of the Scheduled Castes and Scheduled Tribes by providing adequate educational and health services, and
- provision of physical and financial security against all types of exploitation and oppression of the SC/ST communities.

3. In the G.O 1st read above, the Planning, Development and Special Initiatives (SP) Department has designated the Adi Dravidar and Tribal Welfare Department as the 'Nodal Department' for formulation and implementation of SCSP and TSP as per the guidelines of the Union Planning Commission, New Delhi,

4. In the G.O 2nd read above, the Adi Dravidar and Tribal Welfare Department has designated the Heads of Departments of Adi Dravidar Welfare and Tribal Welfare as Monitoring Officers to monitor and review the progress of the schemes under SCSP and TSP respectively at the District levels.

5. Based on the recommendation of the Union Planning Commission, the State Government have decided to constitute a **State Level Monitoring Committee for Scheduled Castes Sub Plan and Tribal Sub Plan** to be headed by the Chief Secretary to monitor the implementation of various schemes to be implemented by the Sectoral Departments of the State under SCSP and TSP.

The composition of the Committee is as follows:-

| Sl.No. | **Officers** | **Designation** |
|---|---|---|
| 1 | **The Chief Secretary to Government** | **Chair Person** |
| 2 | The Principal Secretary to Government, Adi Dravidar and Tribal Welfare Department | Member Secretary |
| 3 | The Principal Secretary to Government, Finance Department | Member |
| 4 | The Principal Secretary to Government, Labour and Employment Department | Member |
| 5 | The Principal Secretary to Government, Co-operation, Food & Consumer Protection Department | Member |
| 6 | The Principal Secretary to Government, Agriculture Department | Member |
| 7 | The Secretary/Principal Secretary to Government, Revenue Department | Member |
| 8 | The Principal Secretary to Government, Rural Development & Panchayat Raj Department | Member |
| 9 | The Principal Secretary to Government, Planning & Development Department | Member |

6. This Committee shall meet once in 3 months to review the performance of all concerned Sectoral Departments implementing schemes under SCSP and TSP. The Government have also decided to invite the Member Secretary, State Planning Commission as Special Invitee while conducting meetings of this Committee. Whenever necessary, Secretaries of other Departments would also be invited.

7. This order is issued with the concurrence of the Planning, Development & Special Initiatives and Finance Departments vide their U.O.Nos.53/Secy/2010 dated 16.08.2010 and 2061/F.S/P/2010 dated 7.09.2010 respectively.

/BY ORDER OF THE GOVERNOR/

VISHWANATH SHEGAONKAR,
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.

To
The Member (SCSP & TSP). Planning Commission,
Government of India, Yojana Bhawan, New Delhi-110 001.
The Adviser (Social Justice), Planning Commission,
Government of India, Yojana Bhawan, New Delhi-110 001.
The Secretary, Ministry of Social Justice and Empowerment,
Government of India, Shastri Bhawan, New Delhi-110 115.
The Secretary, Ministry of Tribal Affairs,
Government of India, Shastri Bhawan,New Delhi-110 001.
The Chief Secretary to Government, Secretariat, Chennai-9.
All Secretaries / Principal Secretaries to Government, Secretariat, Chennai-9.
The Member Secretary, State Planning Commission, Chennai-5.
All Head of Departments
All District Collectors.
Copy to:-
The Private Secretary to the Hon'ble Chief Minister, Chennai-9.
The Senior Personal Assistant to the Minister (ADW), Chennai-9.
The Personal Assistant to the Principal Secretary to Government
Adi Dravidar & Tribal Welfare Department, Chennai-9.
All sections in Adi Dravidar & Tribal Welfare Department, Chennai-9.

/FORWARDED BY ORDER/

SECTION OFFICER.
06.10.10